**இன்றைய வேளாண் செய்திகள்**

**29.07.2013**

**விவசாயிகளுக்கு நவீன இயந்திரம்**

தேனியில் வெள்ளிக்கிழமை மாவட்ட நிர்வாகம் சார்பில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், விவசாயிகளுக்கு அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் மொத்தம் ரூ. 17 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் நவீன விவசாய இயந்திரங்களை ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி வழங்கினார்.

மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்துக்கு, மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ. விஜயாராணி, மாவட்ட வன அலுவலர் சுந்தரகுமார், வேளாண்மை இணை இயக்குநர் சுந்தரம், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செ.முத்தையா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், வேளாண்மை பொறியியல் துறை சார்பில் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வேளாண்மை வளர்ச்சித் திட்ட விவசாயக் குழுவிற்கு நெல் நடவு இயந்திரம், களையெடுக்கும் இயந்திரத்தை ஆட்சியர் வழங்கினார். தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர் துறை மற்றும் வேளாண்மை வணிகத் துறை சார்பில் விவசாயிகளுக்கு டிராக்டர் மற்றும் விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மாவட்ட வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் ஞானபிரகாசம், மேகமலை வன உயிரினக் காப்பாளர் வெங்கடாசாமி, கூட்டுறவு இணைப் பதிவாளர் வெள்ளியங்கிரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**விருதுநகர் மாவட்டத்தில் 16 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல்**

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஆவின் நிறுவனம், கிராமப்புற பால் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் நோக்குடன், 128 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களிடமிருந்தும், 69 இணை உறுப்பினர்களிடமிருந்தும் நாள் ஒன்றுக்கு 16 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்து, பாலுக்கான விலையாக மாதம் ரூ.102 லட்சம் பட்டுவாடா செய்து வருவதாக தமிழக பால் வளத்துறை அமைச்சர் வி.மூர்த்தி கூறினார்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள, மாவட்ட ஆவின் பால் குளிரூட்டும் நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை அமைச்சர் வி.மூர்த்தி ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழக முதல்வரின் உத்தரவுப்படி, இரண்டாம் வெண்மைப் புரட்சியின் பல்வேறு திட்டங்கள் தமிழகத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விருதுநகர் மாவட்டத்தில் 2010-11 ஆம் ஆண்டு பால் கொள்முதல் நாள் ஒன்றுக்கு சராசரி 8,475 லிட்டராகவும், உள்ளூர் விற்பனை 6,460 லிட்டராகவும் இருந்தது. தற்போது தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் நலத்திட்டங்கள் மூலம் படிப்படியாக இது அதிகரித்து பால் கொள்முதல் 16,480 லிட்டராகவும், விற்பனை 8,845 லிட்டராகவும் உயர்ந்துள்ளது.

இங்கு கொள்முதல் செய்யும் பால், 12 வழித்தட ஊர்திகள் மூலம் சேகரம் செய்யப்பட்டு, மாவட்ட பால் குளிர்விக்கும் நிலையம் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் பால் பண்ணை ஆகியவற்றில் குளிர்வித்து, பதப்படுத்தி விற்பனை செய்யப்படுகிறது.

ஸ்ரீவில்லிபுத்தூர் பால் பண்ணை மற்றும் விருதுநகர் பால் குளிர்விக்கும் நிலையம் முதலியவற்றில் உள்ள பழைய இயந்திரங்களை மாற்றி நவீனமாக்கிடவும், ஒன்றியம் மற்றும் புதிய பிரதம பால் கூட்டுறவு சங்கங்களின் அடிப்படை

உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும் இந் நிறுவனம், மத்திய மாநில அரசுகளின் 100 சதவீத மானியத்துடன் தீவிர பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் 2011-12 ம் ஆண்டில் ரூ.89.88 லட்சமும், 2012-13 ஆம் ஆண்டில் ரூ.149 லட்சமும் பெற்று, தற்போது வரை ரூ.141.18 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் பால் உற்பத்தி நாள் ஒன்றுக்கு 21 ஆயிரம் லிட்டராகவும், பால் விற்பனை 10 ஆயிரம் லிட்டராகவும், பால் உப பொருட்கள் விற்பனை மாதம் ரூ.10 லட்சம் ஆகவும் உயர்த்துவதற்கும் ஆக்க பூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார் அவர்.

முன்னதாக ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள ஆவின் குளிரூட்டும் நிலைய வளாகத்தினுள் ஆவின் பாலகத்தினை அமைச்சர் திறந்து வைத்தார்.

ஆய்வின் போது மாவட்ட ஆவின் தலைவர் வழக்குரைஞர் பா.கண்ணன், ஸ்ரீவில்லிபுத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர் வி.டி.முத்துராஜ், நகர் கூட்டுறவு வங்கித் தலைவர் எஸ்.எம்.பாலசுப்பிரமணியம், மாவட்ட வருவாய் அலுவலர் முனுசாமி, கோட்டாட்சியர் ரெங்கன் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**தரமற்ற மக்காச்சோள விதைகளால் விவசாயிகளுக்கு பாதிப்பு**

விருதுநகர் மாவட்ட பகுதிகளில் தரமற்ற மக்காச்சோளத்தை பயிரிட்டதால் கிணற்றுப்பாசன விவசாயிகள் நஷ்டமடையும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக புகார் தெரிவித்துள்ளனர்.

விருதுநகர் மாவட்டப் பகுதிகளில் சாத்தூர், ராஜபாளையம், சேத்தூர், வத்திராயிருப்பு, கூமாபட்டி, சுந்தரபாண்டியம், வ.புதுப்பட்டி, சிவகாசி, நாரணாபுரம், ஆலமரத்துப்பட்டி, வி.முத்துலிங்காபுரம், ஒண்டிப்புலிநாயக்கனூர், இனாம்ரெட்டிபட்டி, எரிச்சநத்தம், குமிழங்குளம், செங்குன்றாபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கிணற்றுப் பாசனத்தில் மக்காச்சோளம் பயிரிட்டுள்ளனர்.

இந்த விதைகளை தனியார் விவசாய விதை விற்பனை நிலையங்களில் வீரிய ஒட்டு ரகம் என்பதால் விவசாயிகள் வாங்கி விதைத்துள்ளனர். இந்த விதை ஒரு ஏக்கருக்கு 7 முதல் 8 கிலோ வரையில் விதைக்க வேண்டும். கிணற்றுப்பாசனம் என்பதால் பயிரும் வேகமாக வளரும். ஆனால், பயிர் வளர்ந்த நிலையில் போதுமான அளவு சோளம் பிடிக்காததால் மகசூல் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. இப்பயிர் சாகுபடிக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் முதல் 16 ஆயிரம் வரையில் செலவாகும். அதில், நன்றாக விளைந்தால் 26 முதல் 28 குவிண்டால் வரையிலும். சுமராக விளைந்தால் 23 முதல் 25 குவிண்டால் வரையில் மகசூல் கிடைக்கும். ஆனால், மிகக்குறைந்த அளவில் மகசூல் கிடைத்திருப்பதாக இந்த விதைகளை பயிரிட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து ஆலமரத்துப்பட்டி விவசாயி எம்.கண்ணன் கூறியாதவது: கிணற்றுப்பாசனத்தில் 6 ஏக்கரில் தனியார் விவசாய பொருள்கள் விற்பனையகத்தில் பி-3396 என்ற வீரிய ரக விதையை வாங்கி பயிரிட்டேன். ஆனால், ஏக்கருக்கு 8 குவிண்டால் என்ற அளவிலேயே மகசூல் கிடைத்துள்ளது. தற்போது, பராமரிப்பு செலவு மற்றும் உரச்செலவு ஆகியவை அதிகரித்துள்ளது. இந்நிலையில் போதுமான மகசூல் கிடைக்காமல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அதேபோல், சிவகாசி வட்டார நீர்ப்பாசன சங்கத்தின் தலைவர் திருவேங்கடராமனுஜம் கூறுகையில், வீரிய ஒட்டு ரகம் என விளம்பரத்தை பார்த்து தனியார் விவசாய பொருள் விற்பனை நிலையத்தில் ஒரு கிலோ ரூ.150 என்கிற

அடிப்படையில் ஒரு ஏக்கருக்கு 7 கிலோ என்ற விதத்தில், 8 ஏக்கரில் பயிரிட்டேன். ஆனால், தட்டை நன்றாக வளர்நத நிலையில் கதிரில் மணி அதிகமாக பிடிக்காமல் இருந்தது. ஒரு ஏக்கருக்கு 25 குவிண்டால் வரை எதிர்பார்த்த நிலையில், தற்போது 6 குவிண்டால் மட்டுமே கிடைத்துள்ளது. எனவே இதுபோன்ற வீரிய ஒட்டு ரக

விதைகளை வேளாண்மை வளர்ச்சி அலுவலகங்களிலும், கூட்டுறவு விவசாய வங்கிகளிலும் விற்பனை செய்ய வேண்டும் என தெரிவித்தார்.

இதுகுறித்து விதைச்சான்று பிரிவு துணை இயக்குநர் நாராயணபிரசாத் கூறுகையில், குறிப்பிட்ட பகுதிகளில் கிணற்றுப் பாசனத்தில் எந்த மாதிரியான வீரிய ரக மக்காச்சோள விதைகளை வாங்கி பயிரிட்டுள்ளனர் என்பது குறித்து நேரில் சென்று ஆய்வு செய்ய வேண்டும். அதன் பின்னரே மகசூல் குறைவுக்கான காரணம் கண்டறிய முடியும் என அவர் தெரிவித்தார்.

**வீடுகளில் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைப்போம்!**

ஒவ்வாரு வீட்டிலும், கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்புத் தொட்டி அமைப்பது நமது கடமை என்று வனத்துறை அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன் பேசினார்.

திருப்பூர் மாநகராட்சிப் பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாநகராட்சி சார்பில் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவ மாணவியர் பங்கேற்ற பேரணி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்து விழிப்புணர்வுப் பேரணியைத் தொடங்கி வைத்து வனத்துறை அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன் பேசியது:

தமிழக முதல்வர் ஜெயலலிதா செயல்படுத்தி வரும் திட்டங்களில் மழைநீர் சேகரிப்புத் திட்டம் மகத்தான திட்டமாகும். 2003-ஆம் ஆண்டில் இத்திட்டம் கொண்டுவரப்பட்டது. தற்போது இத்திட்டத்திற்கு சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது.

எதிர்காலச் சந்ததியினர் வளமாக வாழவும், குடிநீர்த் தட்டுப்பாட்டைத் தவிர்க்கவும் நிலத்தடி நீரை சேமிக்கக் கூடிய மழைநீர் சேகரிப்புத் திட்டம் அவசியம் என்பதை மக்கள் உணர வேண்டும். ஒவ்வொரு குடியிருப்பு, கட்டடத்திலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பை உருவாக்குவது நமது கடமை என்றார்.

இப்பேரணியில் ஆட்சியர் கு.கோவிந்தராஜ், மேயர் அ.விசாலாட்சி, துணை மேயர் சு.குணசேகரன், ஆணையர் கே.ஆர்.செல்வராஜ், கவுன்சிலர்கள், மண்டலத் தலைவர்கள், மாநகராட்சி அலுவலர்கள், செஞ்சிலுவைச் சங்க அமைப்பினர், மாநகராட்சி பள்ளிகளைச் சேர்ந்த 3 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவ, மாணவிகள் மழைநீர் சேகரிப்பு அவசியம் குறித்த பதாகைகளை ஏந்தியவாறு பங்கேற்றனர்.

பசுமை உடை: பேரணியில் பங்கேற்ற மாணவ மாணவியர் உள்ளிட்ட அனைவரும், "மழைநீரை சேகரிப்போம்' என்ற வாசகத்துடன் கூடிய பசுமை நிற டி-ஷர்ட், தொப்பி அணிந்து ஊர்வலமாக சென்றனர். நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்ற இப்பேரணி டவுன்ஹால் மைதானத்தில் நிறைவடைந்தது.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் உயர்ந்து வருவதால் ஆடி 18-ல் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்**

பவானிசாகர் அணை நீர்மட்டம் உயர்ந்து வருவதால் ஆடி 18-ஆம் தேதி அணைப் பகுதியை பார்க்க வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை சென்ற ஆண்டைவிட கூடுதலாக இருக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி மற்றும் கேரள வனப்பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், பில்லூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து அதன் நீர்மட்டம் 100 அடியை எட்டியது. இதனால் அணையில் இருந்து வெளியேறும் உபரிநீர் மேட்டுப்பாளையம் பவானி ஆறு வழியாக அணைக்கு வந்து சேர்கிறது.

தற்போது தெங்குமரஹாடா மோயாற்று வெள்ளநீராலும் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. ஞாயிற்றுக்கிழமை மாலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 74.60 அடியாக உள்ளது. தொடரும் நீர்வரத்தால் ஆற்று மதகுக்கு 1000 கன அடியும், கீழ்பவானி பாசனத்துக்கு 2 ஆயிரம் கன அடி நீரும் திறந்துவிடப்படுகிறது. கடந்த ஆண்டு இதே நாளில் அணையின் நீர்மட்டம் 32 அடியாகவும், நீர்வரத்து 210 கன அடியாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆண்டுதோறும் ஆடி 18 நாளில் மட்டும் அணையின் நீர்த்தேக்கப் பகுதியை பொதுமக்கள் பார்வையிட பொதுப்பணித் துறையினர் அனுமதி அளித்து வருகின்றனர். இதன்படி, நீர்த்தேக்கப் பகுதியை சுற்றுலாப் பயணிகள் காண வரும் ஆக.3-ஆம் தேதி திறந்துவிடப்படுகிறது.

கடந்தாண்டு அணையில் நீர்மட்டம் 33 அடியாக இருந்ததால் நீர்ப்பிடிப்பு இடத்தை பார்க்க பொதுமக்கள் ஆர்வம் காட்டவில்லை. தற்போது, நீர்மட்டம் 74 அடியை எட்டியுள்ளதால் அணைக்கு வருவோரின் எண்ணிக்கை கடந்தாண்டை விட கூடுதலாக இருக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. அணையின் மேல்பகுதியில் நீர்த்தேக்கப் பகுதியை பார்வையிடும் பொதுமக்கள், நீர் இருப்பு பகுதிக்குள் செல்லக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து பார்வையாளர்களின் வசதிக்காக அணைப் பூங்காவில் 3 சிறப்பு நுழைவாயில்கள், மேட்டுப்பாளையம் சாலையில் ஒரு நுழைவாயிலும் திறக்கப்பட உள்ளன. நுழைவுக் கட்டணமாக ஒருவருக்கு ரூ.4 வசூலிக்கப்படும். மேலும் இரு சக்கரம் மற்றும் வாகனங்கள் நிறுத்துவதற்கென கூடுதல் பார்க்கிங் வசதி செய்யப்பட்டுள்ளது.

15 ஏக்கர் பரப்பளவுள்ள அணைப் பூங்காவில் படகு சவாரி உள்ளிட்ட பொழுதுபோக்கு விளையாட்டு அம்சங்கள் உள்ளதால் காலை 7 மணி முதல் மாலை 6 வரை பூங்கா செயல்படும் என அணையின் துணை செயற்பொறியாளர் பொங்கியண்ணன் தெரிவித்தார்.

**"மேட்டூர் அணை உபரி நீரை சேலம் மாவட்டத்திற்கு பயன்படுத்த வேண்டும்**

மேட்டூர் அணை நிரம்பும் போது வெளியேற்றப்படும் உபரி நீரை சேலம் மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் திருப்பிவிட தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் அ.தமிழரசு பேசினார்.

ஓமலூர் வட்ட பாமக பொதுக் குழுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கூட்டத்திற்கு தலைமை வகித்து ஓமலூர் தொகுதி முன்னாள் எம்எல்ஏவும், பாமக மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் அ.தமிழரசு பேசியது:

காவிரி டெல்டா பாசனத்திற்கு முக்கியமான நீர் ஆதாரமாக சேலம் மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள மேட்டூர் அணை உள்ளது. ஆனால், மேட்டூர் அணையால் சேலம் மாவட்டத்தில் விவசாயிகள் பாசனவசதி பெறுவதில்லை. இந்த நிலையை மாற்றும் வகையில், மேட்டூர் அணையின் உபரி நீரை சேலம் மாவட்டத்திற்கு உதவும் திருப்பிவிடும் வகையில் திட்டத்தை தொடங்க வேண்டும் என, பாமக சார்பில் சட்டப்பேரவையில் கோரிக்கை எழுப்பப்பட்டது. தற்போது மேட்டூர் அணை நிரம்பும் தருவாயில் உள்ளதால், இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளும் நிரம்புவதுடன், நிலத்தடி நீர்மட்டமும் உயரும் என்றார் அவர்.

இதில், முன்னாள் எம்.பி. ஆர்.செந்தில், சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் ஆ.சின்னதுரை, செயலாளர் ராமகிருஷ்ணன், ஓமலூர் ஒன்றியச் செயலாளர்கள் துரை.செந்தில்குமார், கலா செல்வன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

100 நாள்களுக்கு மேலாக சிறையில் உள்ள பாமக மற்றும் வன்னியர் சங்க நிர்வாகிகளை நிபந்தனையின்றி விடுவிக்க வேண்டும், தேசியப் பாதுகாப்புச் சட்டம், குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களையும் தமிழக அரசு விடுவிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### மேட்டூர் அணையின் நீர்மட்டம் 100 அடியை எட்டியது

கர்நாடக அணைகளிலிருந்து அதிகளவில் உபரி நீர் திறந்துவிடப்படுவதால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை 100 அடியை எட்டியது. அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 84 ஆயிரம் கன அடியாக இருந்தது.

கர்நாடகத்தில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் பலத்த மழையால் அங்குள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகள் நிரம்பின. அணைகளின் பாதுகாப்பு கருதி, உபரிநீர் திறந்து விடப்படுகிறது.

தற்போது இரு அணைகளில் இருந்தும் நொடிக்கு 70 ஆயிரம் கன அடி நீர் திறந்துவிடப்படுகிறது. இதனால், காவிரி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

சனிக்கிழமை 89 அடியாக இருந்த நீர்மட்டம், ஞாயிற்றுக்கிழமை இரவு 100 அடியை எட்டியது. ஒரே நாளில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 10 அடி உயர்ந்தது.

அணையில் இருந்து குடிநீர்த் தேவைக்காக 6,800 ஆயிரம் கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 59 டி.எம்.சியாக உள்ளது.

மின் உற்பத்தி அதிகரிப்பு: அணையில் இருந்து வெளியேற்றப்படும் தண்ணீர், மின் உற்பத்திக்காகப் பிரித்து விடப்படுவதால், சுரங்க மின் நிலையத்தின் மின் உற்பத்தி 68 மெகா வாட்டாகவும், அணை மின் நிலையத்தில் 10 மெகா வாட்டும், கதவணை உற்பத்தி மூலமாக 47 மெகா வாட் என மொத்தம் 125 மெகா வாட் மின் உற்பத்தி செய்யப்படுகிறது.

பிலிகுண்டுலுவில் 90,000 கன அடி நீர்வரத்து: தமிழக எல்லையான பிலிகுண்டுலுவில் நீர்வரத்து சனிக்கிழமை நொடிக்கு ஒரு லட்சம் கன அடியாக இருந்தது. இது ஞாயிற்றுக்கிழமை நொடிக்கு 90 ஆயிரம் கன அடியாகக் குறைந்தது. இருப்பினும், கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை தொடர்ந்து விடுக்கப்பட்டுள்ளது.

ஒகேனக்கல் அருவிகளில் குளிக்கவும், படகு சவாரி செல்லவும் விதிக்கப்பட்ட தடை நீடிக்கிறது. ஒகேனக்கல் காவிரியில் கரைபுரண்டு ஓடும் நீரின் அழகை ரசிக்க ஞாயிற்றுக்கிழமை ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்திருந்தனர்.

மக்களுக்குப் பாதுகாப்பு: தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். ஒகேனக்கல் பிரதான அருவி மற்றும் பல்வேறு பகுதிகளுக்குச் செல்லும் பாதைகளில் தடுப்பு ஏற்படுத்தப்பட்டு, பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராமர், வட்டாட்சியர் தேவிகா மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள் முகாமிட்டு, நிலைமையை ஆய்வு செய்து வருகின்றனர்.

**பருவமழைக்காக காத்திருக்கும் புதுகை விவசாயிகள்**

வானம் பார்த்த பூமியானபுதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் பருவமழையை எதிர் நோக்கிக் காத்திருக்கின்றனர்.

புதுக்கோட்டை மாவட்டம் முழுக்க முழுக்க விவசாயத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. மாவட்டத்தின் மொத்த சாகுபடி பரப்பான 1.40 லட்சம் ஹெக்டேரில், 12,200 ஹெக்டேர் மட்டுமே காவிரி பாசனப் பகுதியாக இருந்து வருகிறது. மீதமுள்ள 90 % விவசாய நிலங்கள் பருவ மழை, நிலத்தடி நீர் மற்றும் கண்மாய்களையே நம்பியுள்ளன.

இங்கு 6,000-க்கும் மேற்பட்ட கண்மாய்கள் இருந்தாலும், இவற்றில் மிகப்பெரியதான புதுக்கோட்டை கவிநாடு கண்மாய், ஆலங்குடி வல்லநாடு கண்மாய் மற்றும் வெள்ளாறு, குண்டாறு, பாம்பாறு, அம்புலியாறு, கோரையாறு, சூறையாறு உள்ளிட்ட காட்டாறுகளும் நீராதாராமாக உள்ளன.

நில அமைப்பின்படி புதுக்கோட்டை வறட்சி மாவட்டமாகவே இருந்து வருகிறது. 1948-ல் இந்திய அரசுடன் புதுக்கோட்டை சமஸ்தானம் இணைக்கப்பட்டதிலிருந்து காவிரி நீரை இம்மாவட்டத்துக்கு கொண்டு வர வேண்டும் என பல்வேறு தரப்பினரும் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

இந்நிலையில், 2006-ல் திமுக அரசு இத்திட்டத்தை செயல்படுத்த முதல் கட்டமாக ரூ.165 கோடி நிதி ஒதுக்குவதாக சட்டப்பேரவையில் அறிவித்தது. இதனால் மாவட்டத்தின் ஒட்டு மொத்த விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்தனர்.

ஆனால், அந்த ஆட்சிக் காலம் முடியும் வரை திட்டம் தொடங்கப்படாததால், விவசாயிகள் ஏமாற்றத்துடன் மழையை மட்டுமே நம்பியிருக்கும் நிலைக்கு மீண்டும் தள்ளப்பட்டனர்.

இந்நிலையில், நீடித்துவரும் கடும் வறட்சி விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது. கடந்த ஆண்டு சராசரியைவிட குறைவாக 40 % மழையே பெய்தது. இதனால், 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட கண்மாய்கள் வறண்டு கிடக்கின்றன.

கால்நடைகள் குடிநீருக்காக அல்லாடுகின்றன. நிகழாண்டு ஜூலை மாதத்தில் கிடைக்க வேண்டிய இயல்பான மழையளவான 47.10 மி.மீ.க்கு மாறாக இதுவரை 10.5 மி.மீ. மழையே பெய்துள்ளது.

இந்நிலையில், மாவட்டத்தில் வழக்கமான குறுவை சாகுபடி பரப்பான சுமார் 3 ஆயிரம் ஹெக்டேரில் தற்போது சுமார் 10 % பரப்பளவில் மட்டுமே கிணற்று நீரைக் கொண்டு சாகுபடி பணிகள் நடந்து வருகின்றன. இதனால், பெரும்பாலான விவசாயிகள் வறட்சியின் பிடியில் சிக்கியுள்ளனர்.

""தற்போது தமிழகத்தின் மற்ற இடங்களில் பெய்து வரும் மழையால் பல அணைகள் நிரம்பி, ஆற்றுப்பாசன பகுதிகளில் விவசாயப் பணிகள் தொடங்கிவிட்டன. ஆனால், வானம் பார்த்த பூமியான புதுக்கோட்டை மாவட்டத்தில் பருவ மழை பெய்தால் மட்டுமே விவசாயப் பணிகளைத் தொடங்க இயலும், இல்லையெனில் மாவட்டத்தில் விவசாயம் கானல்நீராகிவிடும். இந்தப் பிரச்னைக்கு காவிரி - குண்டாறு இணைப்புத் திட்டத்தை செயல்படுத்துவதே நிரந்தர தீர்வாக இருக்கும்'' என்கிறார் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் மு. மாதவன்.

**"நதிகள் இணைப்பே தமிழகத்தின் வறட்சிக்குத் தீர்வு'**

தென்னக நதிகளை இணைத்தால் மட்டுமே தமிழகத்தின் வறட்சிக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் என்றார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் தா. பாண்டியன்.

பொன்னமராவதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சி. ராஜேஸ்வரராவ் நூற்றாண்டு விழா மற்றும் நிதியளிப்பு பொதுக்கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் பங்கேற்று அவர் மேலும் பேசியது: வட மாநிலங்களில் அதிக மழை பொழிவால் வெள்ளம் கரைபுரண்டோடி, பேரழிவுகள் ஏற்படுகின்றன. ஆனால் தமிழகத்தில் வறட்சியால் மரங்கள் பட்டுப்போய்கிடக்கின்றன. விவசாயிகள் மாடுகளை விற்றுவருகிறார்கள். தமிழகத்தின் பல பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு நிலவுகிறது. விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு பாதிக்கப்பட்ட பகுதிகளை கண்டறிந்து நிவாரணம் வழங்க வேண்டும். இப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வாக தென்னக நதிகளை இணைக்க வேண்டும். உச்சநீதிமன்றமும் இதையே வலியுறுத்தியுள்ளது. எனவே, தமிழக அரசும், அரசியல் கட்சிகளும் நதிநீர் இணைப்புக்கு குரல் கொடுக்க வேண்டும். நதிகளை இணைக்கக் கூடிய கூட்டணி தான் ஆட்சிக்கு வர வேண்டும்.

இந்தியாவில் டீசல், பெட்ரோல் விலை உயர்வும், நிலக்கரி மற்றும் 2 ஜி உள்ளிட்ட ஊழல்களும் பெருகியுள்ளன. காங்கிரஸ், பிஜேபி ஆட்சிக் காலத்தில் இந்தியா பெரிதாக வளரவில்லை. தனியார் நிறுவனங்கள்தான் வளர்ந்துள்ளன.

புதுக்கோட்டை மாவட்டத்தில் வறண்டு கிடக்கும் கண்மாய்களை தூர்வார வேண்டும். திருமயத்தில் தொடங்கப்பட உள்ள பெல் தொழிற்சாலையில் புதுகை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னிரிமை அளிக்க வேண்டும். தமிழக மக்கள் அரசியல் விழிப்புணர்வு பெறவேண்டும் என்றார் தா. பாண்டியன்.

தொடர்ந்து கட்சியின் பொன்னமராவதி ஒன்றியம் சார்பில் ரூ.1.26 லட்சம் நிதி வழங்கப்பட்டது. கூட்டத்துக்கு மாவட்டத் துணைச் செயலர் ஏனாதி ஏஎல். ராசு தலைமை வகித்தார். மாவட்ட செயலர் த. செங்கோடன், ஒன்றிய துணைச் செயலர் எ. சுப்பிரமணியன், விவசாய தொழிலாளர் சங்க மாவட்டச் செயலர் க. சுந்தர்ராஜன், மாநிலக் குழு உறுப்பினர்கள் வீ. சிங்கமுத்து, கேஆர். தர்மராஜன் உள்ளிட்டோர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை இரவு 100 அடியாக இருந்தது**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை இரவு 100 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 88,268 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 6,005 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**பயிர்க்கடனை மத்திய காலக் கடனாக மாற்ற வலியுறுத்தல்**

விவசாயிகள் பெற்ற பயிர்க்கடன் மீதான வட்டியைத் தள்ளுபடி செய்து, அதை மத்திய காலக் கடனாக மாற்ற மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அனைத்து விவசாயிகள் சார்பில் தமிழக விவசாயிகள் சங்க மாநில செயலர் ஆர். ராஜாசிதம்பரம் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமதுவிடம் அண்மையில் அளித்த மனு:

சென்னை நீங்கலாக 31 மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவித்து, தமிழக அரசு நிவாரண உதவித்தொகை வழங்கியது.

வறட்சியால் விவசாயிகள் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் உள்ள சிரமத்தைத் கருத்தில்கொண்டு, விவசாயிகள் பெற்ற கடன் மாற்றியமைக்கப்படும் என அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவு, அரசாணை பிறப்பித்த 3 மாதங்களுக்கு பிறகே கிராமக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு வழங்கப்பட்டது.

அதில் 31.1.2013 வரை நிலுவையில் உள்ள பயிர்க்கடனில் வட்டாட்சியரிடம் பெற்ற சான்றிதழில் குறிப்பிட்ட பயிர்களுக்கு மட்டும் 3 ஆண்டுகளில் கடனைத் திருப்பிச் செலுத்திடும் வகையில் மத்திய காலக் கடனாக மாற்றியமைக்கப்படும் என்றும், அதற்கு 10.25 சத வட்டி வசூல் செய்யவும், தவணை தவறிய கடன் மீது 3 சத அபராத வட்டி வசூல் செய்யவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், வறட்சி தொடர்ந்து நீடிப்பதால் விவசாயிகள் கடன் தொகையை கட்ட முடியாமல் அவதிப்படும் நிலையைக் கருத்தில் கொண்டு,

குறிப்பிட்ட பயிர்களுக்கு மட்டும் என்பதை மாறுதல் செய்து, நிலுவையில் உள்ள பயிர்க்கடன் மீதான வட்டியையும், 3 ஆண்டுகளில் கடனைச் செலுத்திட மாற்றியமைக்கப்பட்ட கடன்களுக்கும், கெடுவில் கடனைச் செலுத்திடும் விவசாயிகளிடம் வட்டியை அறவே வசூல் செய்யாமல், ஏற்கெனவே வழங்கப்படுவது போல வட்டிச் சலுகை வழங்கிடும் வகையில் கூட்டுறவுத் துறைக்கு தமிழக அரசு ஆணை பிறப்பிக்க மாவட்ட நிர்வாகம் பரிந்துரைக்க வேண்டும்.

மேலும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் பெற்ற பயிர்க்கடன் மீதான வட்டியை வசூல் செய்யாமல், அசலை மட்டும் 3 ஆண்டுகளில் செலுத்திடும் வகையில் மத்திய கால கடனாக மாற்றி அமைக்க, மத்திய அரசுக்கு தமிழக அரசு பரிந்துரைக்க வேண்டும்.

**காய்கறிச் சாகுபடியில் உயிர் உரங்களின் பயன்பாடு குறித்த கருத்தரங்கம்**

பெரம்பலூர் வடக்குமாதவி சாலையில் உள்ள உழவர் சந்தையில், தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் உயிர்

தொழில்நுட்பவியல், உயிர் தகவலியல் துறை சார்பில் காய்கறிச் சாகுபடியில் உயிர் உரங்கள் குறித்த கருத்தரங்கம் சனிக்கிழமை நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் அருணா தினகரன் தலைமை வகித்தார். துணை முதல்வர் எஸ்.எச். அப்ரோஸ் முன்னிலை வகித்தார்.

சிறப்பு விருந்தினராக பங்கேற்ற உயிர் தொழில்நுட்பவியல் மற்றும் உயிர் தகவலியல் துறை முனைவர் க. முத்துக்கிருஷ்ணன் பேசியது:

உயிர் உரங்களானது நுண்ணுயிரிகளால் ஆனவை. இவை மண்ணின் வளத்தை மேம்படுத்தவும், வேதி உரங்களால் இழக்கப்பட்ட உயிர்ச் சத்தை மீட்கவும் பயிரிடப்படுகிறது.

மேலும், தாவரங்கள் செழித்து வளரவும், விவசாயத்தையும், பொருளாதாரத்தையும் மேம்படுத்தவும் பெரிதும் உதவுகிறது என்றார் அவர்.

தொடர்ந்து, கருத்தரங்கில் பங்கேற்ற விவசாயிகளுக்கு அதிகப்பயன் தரும் உயிர் உரங்களைத் தயாரிக்கும் முறை குறித்துப் பயிற்சியளிக்கப்பட்டது.

மேலும், பொதுமக்களுக்கு அதுகுறித்த துண்டுப் பிரசுரங்களும் விநியோகம் செய்யப்பட்டன. நிகழ்ச்சியில் வேளாண் அலுவலர்கள் தனபால், ரமேஷ், உதவி வேளாண் அலுவலர்கள் சின்னதுரை, துரை முருகன், கல்லூரி மாணவிகள், 75-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

முதுகலை இறுதியாண்டு மாணவிகளில் ஆக்கிலா வரவேற்றார். பிரியா நன்றி கூறினார்.

**ஓட்டப்பிடாரம் பகுதியில் மழை இல்லாததால் கோடை உழவுப் பணியில் தொய்வு**

ஓட்டப்பிடாரம் வட்டத்தில் கோடை மழை பெய்யாததால் விவசாயிகள் தங்கள் நிலங்களில் கோடை உழவுப் பணியை தொடர்வதில் தொய்வு ஏற்பட்டுள்ளது.

மேய்ச்சல் நிலங்கள் அனைத்தும் காய்ந்து போனதால், சருகுகளை கால்நடைகள் மேய்ந்து வருகின்றன.

தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் வட்டத்தில் மானாவாரி நிலங்கள் அதிகமாக உள்ளன. இந்தப் பகுதியில் புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் விதைப்புப் பணிகள் நடைபெறுவது வழக்கம். அதற்கு முன் ஆனி மற்றும் ஆடி மாதங்களில் பெய்யும் கோடை மழைக்கு மானாவாரி நிலங்களை விவசாயிகள் கோடை உழவு செய்வது உண்டு.

இந்தாண்டு கோடை மழை இதுவரை பெய்யாத நிலையில் 15 ஆண்டுகளுக்குப் பின் கடுமையான வெயிலும், வேகமான கோடைக் காற்றும் இருந்து வருகிறது. இதன் தாக்கம் நிலத்தடி நீர்மட்டம் வேகமாக குறைந்துவிட்டது. அதுபோல் ஊராட்சி நிர்வாகம் ஆழ்குழாய் கிணறுகள் மூலம் பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வரும் குடிநீர் பணியும் பாதிக்கப்பட்டுவிட்டது.

விவசாயிகள் ஆடி மாதத்தில் விதைப்புப் பணிக்காக கோடை உழவு செய்யும் பணியும் மழை இல்லாததால் தொய்வு ஏற்பட்டுவிட்டது. நிலங்கள் அனைத்தும் வறண்ட நிலையில் விரிசல்கள் ஏற்பட்டும், உழவு செய்யமுடியாத அளவுக்கு கடினமான இடமாகவும் மாறிவிட்டன. விவசாயிகள் இந்தாண்டு கடுமையான வெயில் மற்றும் காற்று அடிப்பதால் வரவுள்ள வடகிழக்குப் பருவமழை நன்றாக பெய்யும் என எதிர்பார்க்கின்றனர்.

அதற்கு ஏற்றார்போல் பருவமழைக்கு முன் நிலத்தை நன்கு பண்படுத்தி விடலாம் என்றால் கோடை மழை பொய்த்துவிடுமோ என அச்சமடைந்துள்ளனர். இதற்கிடையே விவசாயிகள் வளர்த்து வரும் கால்நடைகளுக்கு குடிநீரும், இரையும் கிடைக்கவில்லை. இதனால் கால்நடைகள் கருகிப்போன சருகுகளையும், கட்டாந்தரையிலும் மேய்ந்து வருகின்றன.

இன்னும் சில நாள்களில் கோடை மழை பெய்தால் தான் கால்நடைகளுக்கு தண்ணீரோ, இரையோ கிடைக்கும் நிலையில் உள்ளது.

**100 அடியைத் தாண்டியது மேட்டூர் அணையின் நீர்மட்டம்**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 100 அடியை தாண்டியது.

கர்நாடகத்தில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் பலத்த மழையால் அங்குள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகள் நிரம்பின. அணைகளின் பாதுகாப்பு கருதி, உபரிநீர் திறந்து விடப்படுகிறது. இதனால், காவிரி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

அதன்படி மேட்டூர் அணையில் நீர்மட்டம் இன்று காலை நிலவரப்படி 100.85 அடியாக உள்ளது. மேலும் அணைக்கு வரும் நீரின் அளவு, வினாடிக்கு 88.988 ஆயிரம் கனஅடியாக உயர்ந்துள்ளது. தற்போதைய நிலையில் அணையில் 65.94 டி.எம்.சி,. தண்ணீர் இருப்பு உள்ளது. மேட்டூர் அணையில் இருந்து சுமார் 6800 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

**மேட்டூர் அணை தாமதமாகத் திறப்பு குறுவை சாகுபடி பாதிப்பு:கருணாநிதி குற்றச்சாட்டு**

மேட்டூர் அணை தாமதமாகத் திறக்கப்பட்டதால் குறுவை சாகுபடி முழுமையாகப் பாதிக்கப்பட்டுவிட்டதாக திமுக தலைவர் கருணாநிதி குற்றம்சாட்டியுள்ளார்.இது தொடர்பாக இன்று அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிறுப்பதாவது:-

சம்பா சாகுபடிக்காக மேட்டூர் அணை ஆக.12-ஆம் தேதியன்று திறக்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.இதன் மூலம் இந்த ஆண்டு குறுவைச் சாகுபடி இல்லாமல் போய்விட்டது என்பது உறுதியாகிவிட்டது.குறுவைச் சாகுபடி தொடர்பாக ஜூன் 23-ஆம் தேதி நான் (கருணாநிதி) ஓர் அறிக்கை விடுத்திருந்தேன்.அந்த அறிக்கையில் குறுவை சாகுபடி செய்வதற்கு நீர் கிடைக்குமா அதிமுக அரசு இனிமேலாவது விழித்துக் கொண்டு செயல்பட வேண்டும் என்று கூறியிருந்தேன்.

அதற்குத்தான் இப்போது குறுவைச் சாகுபடி கிடையாது, சம்பா சாகுபடி மட்டும்தான் என்று முதல்வர் பதில் கொடுத்துள்ளார்.தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் வகையில், பாசன ஆதாரங்களை வலுப்படுத்துவதிலும், வேளாண் துறையில் புதிய தொழில்நுட்பங்களை புகுத்துவதிலும் விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் இந்தியாவுக்கே தமிழக அரசு முன்னோடியாக விளங்குகிறது என்று ஜெயலலிதா கூறியுள்ளார்.கடந்த ஆண்டு சாகுபடி பொய்த்துவிட்டது. இந்த ஆண்டும் குறுவை சாகுபடி இல்லை.

ஜூன் 12-ஆம் தேதி திறக்க வேண்டிய மேட்டூர் அணையை, கடந்த ஆண்டு செப்.17-ல் திறந்தார்கள்.கடந்த ஆண்டு இவ்வாறு தாமதமாக அணை திறக்கப்பட்டதால், பிப்ரவரி மாதம் இறுதிவரை நீர் தேவைப்படும் என்று டெல்டா விவசாயிகள் கோரியிருந்தனர்.பொதுவாக டெல்டா பாசனத்துக்கு வழக்கமாக ஜனவரி 28-ஆம் தேதி வரை மேட்டூர் அணை திறந்து வைக்கப்படும்.

இந்தியாவுக்கு முன்னோடியாக விளங்குவதாக கூறும் தற்போதைய ஆட்சியில், ஜனவரி மாதம் பிறப்பதற்கு முன்பாகவே, டிசம்பர் 21-ஆம் தேதி இரவு 8 மணியோடு பாசனத்துக்காக அணை திறந்து மூடப்பட்டுவிட்டது.2012-ல் தான் ஜூன் 12-ம் தேதியன்று குறிப்பிட்ட நேரத்துக்குள் மேட்டூர் அணை திறக்கவில்லை என்றால், 2013-ஆம் ஆண்டிலாவது ஜூன் 12-ம் தேதியன்று வழக்கம்போல் தண்ணீர் திறக்கப்பட்டதா என்றால் அதுவும் இல்லை.

இந்த நிலையில் எப்படி வேளாண்மையில் இந்தியாவுக்கே முன்னோடியாக தமிழக திகழ முடியும்? என்று கருணாநிதி கேள்வியெழுப்பியுள்ளார்.

**நீலகிரியில் கனமழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒரு சில இடங்களில் திங்கள்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தின் சில பகுதிகளில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் மற்றும் வட மாநிலங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. தென் மேற்கு பருவமழை தொடங்கிய ஜூன் 1-ம் தேதியில் இருந்து தற்போது வரை சராசரி மழை அளவை விடக் காட்டிலும் 16 சதவீதம் கூடுதல் மழை நாடு முழுவதும் பெய்துள்ளது.

தமிழகத்தைப் பொருத்த வரை தென்மேற்கு பருவ மழையின் தாக்கம் மற்றும் வெப்பச் சலனம் காரணமாக பரவலாக மழை பெய்கிறது. நீலகிரி, வால்பாறை, தேனி, கோவை உள்ளிட்ட இடங்களில் சனிக்கிழமை மாலையில் இருந்து ஞாயிற்றுக்கிழமை காலை வரை மழை பெய்துள்ளது.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒரு சில இடங்களில் திங்கள்கிழமையன்று மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும். நீலகிரி மாவட்டத்தில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையைப் பொருத்த வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):- நீலகிரி மாவட்டம் நடுவட்டம் - 60, நீலகிரி மாவட்டம் தேவலா, கூடலூர் - 50, வால்பாறை - 30, தேனி மாவட்டம் உத்தமபாளையம், கோவை மாவட்டம் சின்னக்கல்லாறு - 20, ஊட்டி, கோத்தகிரி - 10.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**29.07.2013**

## வாழை, முருங்கை சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

தேனி: வாழை, முருங்கை சாகுபடி செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். மாவட்டத்தில் தென்னை, கரும்பு, நெல், பருத்தி சாகுபடி செய்த விவசாயிகள் பலரும், தற்போது வாழை, முருங்கை சாகுபடிக்கு மாறி வருகின்றனர். வாழையில் தற்போது கண்டறியப்பட்டுள்ள திசுவாழை என்ற உயர்ரகத்தில், விளைச்சல் அதிகம் கிடைக்கிறது. வாழைப்பழத்திற்கு விலையும் நன்றாக கிடைக்கிறது. சேமித்து வைக்கவும், சீராக பழுக்க வைக்கவும் தொழில்நுட்பத்துடன் கூடிய உள் கட்டமைப்பு வசதிகள் பெருகி உள்ளன. எனவே, மாவட்டம் முழுவதும் பரவலாக எல்லா பகுதிகளிலும் வாழை சாகுபடி அதிகரித்துள்ளது.வறட்சி அதிகம் உள்ள பகுதிகளில், முருங்கை சாகுபடி நடக்கிறது. குறைந்த அளவு நீர் ஆதாரம் உள்ள பகுதிகளில் விளைவதாலும், குறைவான பராமரிப்பு செலவு காரணமாகவும், நல்ல விலை கிடைப்பதாலும் விவசாயிகள் முருங்கை பயிரிட ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## கொப்பரை தேங்காய்ரூ.63 லட்சத்துக்கு ஏலம்

பெருந்துறை: பெருந்துறை வேளாண் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனை கூட்டுறவு சங்கத்தில், கொப்பரை தேங்காய் ஏலம் நடந்தது.பெருந்துறை மற்றும் அதன் சுற்று வட்டாரத்தில் இருந்து உற்பத்தியாளர்கள் கொப்பரை தேங்காய்களை, விற்பனைக்கு கொண்டு வந்தனர். மொத்தம், 2,758 மூட்டைகளில், ஒரு லட்சத்து, 35 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய் கொண்டு வரப்பட்டது.இதில், முதல் தர

கொப்பரை தேங்காய் ஒரு கிலோ, 46 ரூபாய், 75 காசு முதல், 49 ரூபாய், 50 காசு வரை ஏலம் போனது.இரண்டாம் தரம் கொப்பரை தேங்காய், 33 ரூபாய், 15 காசு முதல், 46 ரூபாய், 25 காசு வரை ஏலம் போனது.இந்த விலை கடந்த வாரத்தைவிட கிலோவுக்கு, 50 காசு குறைவாகும். மொத்தம், 63 லட்சம் ரூபாய்க்கு கொப்பரை தேங்காய் விற்பனையானது, என சங்கத்தலைவர் அருள்ஜோதிசெல்வராஜ் தெரிவித்தார்.

## காவிரி கரையோர தென்னைகள் அழிப்பு :வறட்சியால் விவசாயிகள் சோகம்

கரூர்: தொடர் மணல் கொள்ளை மற்றும் வறட்சியால், 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் கண்ணெதிரே அறுத்து சாய்க்கப்படுவதால், விவசாயிகள் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.கரூர் மாவட்டத்தில் கிருஷ்ணராயபுரம், லாலாப்பேட்டை, மாயனூர், குளித்தலை ஆகிய பகுதியில், காவிரி ஆற்றின் நீர்பாசன வசதி மூலம் வாழை, வெற்றிலை, கரும்பு, தென்னை உள்ளிட்ட பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. இதில் காவிரி ஆற்றின் கரையோரங்களில் உள்ள வயல்வெளி ஓரத்திலும், தோப்பிலும், இரண்டு லட்சம் தென்னை மரங்கள் வளர்க்கப்படுகின்றன. காவிரியில் நீர்வரத்து இல்லாத காரணத்தால், வாழை, வெற்றிலை சாகுபடி பெருமளவில் பாதித்தது. ஆற்று பாசனத்தை நம்பியிருந்து விவசாயிகள், தற்போது வயல்களில் கிணறு தோண்டியும், ஆழ்குழாய் கிணறு அமைத்து பயிர்களைக் காப்பாற்ற போராடி வருகின்றனர்.

இப்பகுதியில் உள்ள தென்னை மரங்கள் உயிர் துளிக்க தண்ணீர் இல்லாததால் கருகிவிட்டன. குறிப்பாக குளித்தலை பகுதியில் காவிரி ஆற்றின் கரையில் உள்ள வதியம், திம்மாச்சிபுரம், வீரவள்ளி, குளித்தலை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள, 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் கருகி, வறட்சியின் கோரதாண்டவத்தை உணர்த்துவதாக உள்ளது.ஒவ்வொரு நாளும் கருகும் தென்னை மரங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதுகுறித்து அப்பகுதி

விவசாயிகள் கூறியதாவது:

ஒரு தென்னை மரத்தில் ஆண்டுக்கு, 100 முதல், 150 காய்கள் வரை காய்க்கும். தென்னை மரத்தில் கிடைக்கும் தேங்காய் முதல், மட்டை வரை, வியாபாரம் செய்யப்படுகிறது. ஐம்பது மரங்கள் கொண்ட தோப்பில், நான்கு மாதத்துக்கு, ஒருமுறை காய்கள் பறிக்கப்படும். இதன் மூலம், நான்காயிரம் ரூபாய் வருமானம் விவசாயிகளுக்கு கிடைத்து வந்தது. இனி காவிரியில் தண்ணீர் வந்து, அதன் மூலம் கிளை வாய்க்கால்களில் தண்ணீர் வந்தாலும், கருகிய மரங்களை உயிர்ப்பிக்க முடியாது என்பதால், வெறும், 100 ரூபாய்க்கு செங்கல் சூளைக்கு அடுப்பு எரிக்க, தென்னை மரங்களை விவசாயிகள் விற்று வருகின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.பாடுபட்டு வளர்த்த தென்னை மரங்கள் கண்ணெதிரே அறுத்து சாய்க்கப்படுவதைக் கண்டு விவசாயிகள் கண்ணீர் விடாத குறையாக உள்ளனர். இது மட்டுமல்லது காவிரி ஆற்று பகுதிகளில் இடைவிடதாது மணல் கொள்ளை நடப்பதால், ஆற்றில் ஈரப்பதம் முற்றிலும் வறண்டு, தென்னை, பனை மரங்கள் கருகுகினறன. இதுகுறித்து வேளாண்துறை அதிகாரிகள் கூறியதாவது:ஆற்று ஓரங்களில் உள்ள தென்னை மரம் வேர் படர்ந்து சென்று, மணலில் உள்ள ஈரப்பத்தை கொண்டு உயிர்வாழும் தன்மை கொண்டது. ஆனால் மிகவும் ஆழமாக சென்று நீரை உறிஞ்சும் திறன், இதன் வேர்களுக்கு கிடையாது. கடந்த, ஆறு மாதங்களுக்கு மேலாக ஆற்றில் தண்ணீர் ஓடாததாலும், இங்கு அளவுக்கு அதிகமாக, 50 அடி ஆழத்துக்கு மணல் அள்ளப்படுவதால், ஆற்றில் ஈரப்பதம் முற்றிலும் வறண்டு போய் உள்ளது.

இதனால் தென்னை மரம் வேர்களால், தண்ணீரை உறிஞ்ச முடியவில்லை. குறைந்த பட்சம் தென்னை உயிர்வாழ, 20 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் வேண்டும். உயிர் தண்ணீர் கூட கிடைக்கவில்லை என்றால், தென்னை மரங்கள் பட்டுப்போவதை தடுக்க முடியாது. ஒரு தென்னை மரம் பட்டு விட்டால், மீண்டும் தண்ணீர் கிடைத்தாலும் கூட பிழைக்க வாய்ப்பு கிடையாது.இது ஒருபுறமிருக்க,

மணல் கொள்ளையால் நிலத்தடி நீர் அதலபாதாளத்துக்கு சென்றதால், கடும் வறட்சியில் கூட தாக்குபிடிக்கும் பனை மரங்கள், பட்டு போயுள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினார்.தற்போது மேட்டூர் அணையிருந்து, 6000 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. மேலும் அணையின் நீர்மட்டம், 100 அடியை தாண்டும் என எதிர்பார்க்கப்படுவதால், ஆகஸ்ட், 12ம் தேதி முதல் சம்பா சாகுபடிக்கு திறந்து விடப்படும் என, தமிழக அரசு அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு தென்னை விவசாயி வயிற்றில் பால் வார்த்தது போல் உள்ளது.

### மானிய விலையில் மோட்டார்கரூர் விவசாயிகள் கோரிக்கை

கரூர்: "மின் அல்லது டீஸல் மோட்டாரை மானிய விலையில் வழங்க வேண்டும்' என, விவசாயிகள் ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.கரூர் மாவட்டம், கடவூர் ஒன்றியம், தரகம்பட்டியில் விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. இதில் கடவூர் வேளாண் உதவி இயக்குனர் ஜெயந்தி தலைமை வகித்தார். தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் வீரமணி முன்னிலை வகித்தார். பருவமழை பொய்ப்பு, விவசாய விளைப்பொருள்களுக்கு உரிய விலை இல்லாதது போன்ற காரணங்களால், தாங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே கிணற்று பாசனம் மூலம் விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகளின் நலன்கருதி, மின் மோட்டார் மற்றும் நீர் இறைக்கும் டீசல் இயந்திரம் ஆகியவற்றை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என, வலியுறுத்தப்பட்டது.மேலும் நெல், சோளம், கம்பு, மக்காச்சோளம், நிலக்கடலை, சூரியகாந்தி, எள், துவரை, உளுந்து, கரும்பு மற்றும் காய்கறிகள், மலர் வகைகள், பழ வகைகள் ஆகிய சாகுபடிகளில் விவசாயிகளுக்கு ஏற்படும் இடர்பாடுகள் குறித்து விவசாயிகள் தங்களது கருத்தை கூறினர்.கூட்டத்தில், தமிழ்நாடு விவசாய சங்க மாவட்ட தலைவர் தங்கவேல், வேளாண் விற்பனை அலுவலர் டேவிட், துணை தோட்டக்கலை அலுவலர்

நாகராஜன், வேளாண் அலுவலர் மோகன்குமார், துணை வேளாண் அலுவலர் குணசேகரன் உட்பட பலர் பங்கேற்றனர்.

### பயிர்க்கடன் வட்டி தள்ளுபடிகலெக்டரிடம் புது கோரிக்கை

பெரம்பலூர்: "விவசாயிகள் பெற்ற பயிர்க்கடன் மீதான வட்டியை தள்ளுபடி செய்து, மத்திய காலகடனாக மாற்ற வேண்டும்' என, மத்திய, மாநில அரசுகளுக்கு அனைத்து விவசாயிகள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.பெரம்பலூர் மாவட்ட அனைத்து விவசாயிகள் சார்பில், தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில செயலாளர் ராஜாசிதம்பரம், பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமதுவிடம் கோரிக்கை மனு கொடுத்தார். அந்த மனுவில் கூறியிருப்பதாவது:சென்னை நீங்கலாக, 31 மாவட்டங்களை தமிழக அரசு வறட்சி பாதித்த மாவட்டங்களாக, வருவாய்த்துறை கடந்த பிப்., 13ம் தேதி அறிவித்து, நிவாரண உதவிகளை வழங்கியது. வறட்சி காரணமாக விவசாயிகள் கடனை திருப்பி செலுத்துவதில் உள்ள சிரமத்தை கருத்தில் கொண்டு, விவசாயிகள் பெற்ற கடன்கள் மாற்றியமைக்கப்படும் என்று அரசு ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.இதற்கான உத்தரவு அரசு ஆணை பிறப்பித்த, மூன்று மாதங்கள் கடந்த பின்னர்தான் கிராம கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அந்த உத்தரவில் கடந்த ஜன., 31ம் தேதி வரை நிலுவையில் இருக்கும் பயிர்க்கடனில், தாசில்தாரிடம் பெற்ற அனாவாரி சான்றிதழில் குறிப்பிட்ட பயிர்களுக்கு மட்டும், மூன்றாண்டுகளில் கடனை திருப்பி செலுத்திடும் வகையில் மத்திய கால கடனாக மாற்றி அமைக்கப்படும் என்றும், அதற்கு, 10.25 சதவீதம் வட்டி வசூல் செய்யவும், தவணை தவறிய கடன் மீது, மூன்று சதவீத அபராத வட்டி வசூல் செய்யவும் குறிப்பிட்டுள்ளது.வறட்சி தொடர்ந்து நீடித்து வருவதால், கடனை விவசாயிகள் கட்டமுடியாமல் அவதிப்பட்டுவரும் சிரமத்தை கருத்தில் கொண்டு, அனாவாரி சான்றிதழில் குறிப்பிட்ட பயிர்களுக்கு மட்டும் என்பதை

மாறுதல் செய்து, நிலுவையில் உள்ள பயிர்க்கடன் மீதான வட்டியையும், மூன்றாண்டுகளில் கடனை செலுத்திட மாற்றியமைக்கப்பட்ட கடன்களுக்கும், கெடுவில் கடனை செலுத்திடும் விவசாயிகளிடமும், வட்டியை அறவே வசூல் செய்யாமல், ஏற்கனவே வழங்கப்பட்டு வருவது போல வட்டிச்சலுகை வழங்கிடும் வகையில், கூட்டுறவுத்துறைக்கு தமிழக அரசு ஆணை பிறப்பிக்க மாவட்ட நிர்வாகம் பரிந்துரை செய்திடவேண்டும்.தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் பெற்ற பயிர் கடன் மீதான வட்டியை வசூல் செய்யாமல், அசலை மட்டும், மூன்றாண்டுகளில் செலுத்திடும் வகையில், மத்திய கால கடனாக மாற்றி அமைக்கவும் மத்திய அரசுக்கு, தமிழக அரசு பரிந்துரை செய்திட மாவட்ட கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 50 சதவீத மானியத்தில் பசுந்தாள் விதை: வேளாண்துறை அறிவிப்பு

செய்யூர்:சித்தாமூர் வேளாண்மை அலுவலகத்தில், பசுந்தாள் விதை, 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுவதால், விவசாயிகள் வாங்கி பயனடையலாம் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள், பயிர் சாகுபடிக்கு தொழுஉரம் இடுவது குறைந்துள்ளதால், மண்ணில் அங்கக சத்து குறைந்துள்ளது. இதனால், மக‹ல் குறைகிறது. இதற்கு எளிய தீர்வு, பசுந்தாள் உர பயிர் சாகுபடி செய்வதாகும். இதன் மூலம், மண்ணில் அதிக அளவு அங்கக சத்து சேர்க்கப்பட்டு, மண் வளம் பாதுகாக்கப்படுவதுடன், ரசாயன உரச் செலவு பாதியாக குறைக்கிறது. மேலும், 10 - 15 சதவீதம் கூடுதல் மக‹ல் பெற முடியும். பயிர் நன்றாக வளர்ச்சி பெறும். பூச்சி தாக்குதல் இருக்காது.

தற்போது, சித்தாமூர் வேளாண்மை அலுவலகத்தில், 15 மெட்ரிக் டன் பசுந்தாள் உர விதை வினியோகிக்கப்பட்டுள்ளது. இவ்விதை, 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு, 16 கிலோ விதை போதுமானது. விதைத்த 40வது நாளில் மடித்து உழுதால், நிலத்திற்கு தேவையான அங்கககசத்து

கிடைத்துவிடும்.

மேலும், சம்பா பருவத்திற்கு ஏற்ற வெள்ளை பொன்னி 5 மெட்ரிக் டன், பாபட்லா 20 மெட்ரிக் டன் இருப்பு உள்ளது. வெள்ளை பொன்னி ஒரு கிலோ, 33.50ரூபாய், மானிய விலையில், 28.50ரூபாய்க்கும், பாபட்லா ஒரு கிலோ, 39 ரூபாய். மானிய விலையில், 34 ரூபாய்க்கும் கிடைக்கும் தேவைப்படும் விவசாயிகள், சித்தாமூர் வேளாண்மை அலுவலரை அணுகி பெற்று பயனடையலாம்.

## வான்கோழி வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம்

காஞ்சிபுரம்:ஏனாத்தூர் உழவர் பயிற்சி மையத்தில், வான்கோழி வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் நடந்தது.

காஞ்சிபுரம் அடுத்த ஏனாத்தூர் உழவர் பயிற்சி மையத்தில், வான்கோழி வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் நடந்தது. உழவர் பயிற்சி மைய பேராசிரியர் வெங்கடசுதாகர் ராவ் முகாமினை துவக்கி வைத்தார்.

உதவி பேராசியர் வசந்தி, வான்கோழி வளர்ப்பு முறை, கோழி குஞ்சுகள் கிடைக்கும் இடம், வளர்ப்பு முறை, சந்தைபடுத்தும் முறை போன்றவை குறித்து, விவசாயிகளுக்கு விளக்கினார்.

பண்ணையில் வளர்க்கப்படும் வான்கோழிகள் குறித்து, படக்காட்சி காண்பிக்கப்பட்டது.

இதில், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, காட்டாங்கொளத்தூர், செய்யூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து, 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## மஞ்சள் ஏலம் ஒத்திவைப்பு: விவசாயிகள் ஏமாற்றம்

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்துக்கு, 1,000 மஞ்சள் மூட்டைகள் விற்பனைக்கு வந்தபோதும், வியாபாரிகள் கலந்து கொள்ளவில்லை. அதனால், மஞ்சள் ஏலம் இன்றைக்கு ஒத்திவைக்கப்பட்டது.ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள்

கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரந்தோறும் பருத்தி, மஞ்சள் மற்றும் தானியம், எண்ணெய் வித்துகள் ஏலம் நடந்து வருகிறது. கடந்த சனிக்கிழமை, மஞ்சள் ஏலத்துக்கு, ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, பெரம்பலூர், சின்னசேலம் பகுதியில் இருந்து, 300க்கும் மேற்பட்ட விவசாயிகள், 1,000 மூட்டை மஞ்சளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

இந்நிலையில், சேலம், ஈரோடு, நாமக்கல் பகுதியை சேர்ந்த, மஞ்சள் வியாபாரிகள், நேற்று முன்தினம், சேலத்தில் நடந்த கூட்டத்துக்குச் சென்றதால், மஞ்சள் ஏலம், இன்றைக்கு (ஜுலை 29) ஒத்திவைக்கப்பட்டது.அதனால், விவசாயிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

### மேட்டூர் அணை நீர்மட்டம்100 அடியை எட்டியது

மேட்டூர்: நீர்வரத்து அதிகரித்ததால், மேட்டூர் அணை நீர் மட்டம், இரு ஆண்டுக்கு பின், நேற்று இரவு, 11 மணிக்கு, 100 அடியை எட்டியது.மேட்டூர் அணை மொத்த நீர்மட்டம், 120 அடி. கடந்த, 2011ம் ஆண்டு பருவமழை சீஸனில் நவம்பர், 6ம் தேதி மேட்டூர் அணை நீர்மட்டம், 100 அடியை எட்டியது. அதன் பின், பாசனத்துக்கு நீர் திறந்ததாலும், நீர்வரத்து குறைந்ததாலும், அணை நீர்மட்டம் கிடுகிடுவென குறைந்தது. 23 ஆண்டுக்கு பின், கடந்த ஜுன், 25ல், அணை நீர்மட்டம், 15 அடியாக சரிந்தது.

காவிரி நீர்பிடிப்பு பகுதியில், பருவமழை தீவிரம் அடைந்து கர்நாடகாவில் உள்ள கபினி, கே.ஆர்.எஸ்., அணைகள் நிரம்பியது. இரு அணைகளில் திறக்கப்பட்ட உபரி நீர் மேட்டூர் அணைக்கு தொடர்ச்சியாக வந்ததால், நேற்று இரவு, 11 மணிக்கு அணை நீர்மட்டம், 100 அடியாக உயர்ந்தது.அணை நீர்மட்டம், 100 அடியை எட்டியதால், நேற்று இரவு அணையின், 16 கண் மதகில் சிறப்பு பூஜை நடந்தது. இதில், அணை செயற்பொறியாளர் கந்தசாமி, உதவி செயற்பொறியாளர்

கோவலன், உதவி பொறியாளர் சிங்காரவேலு உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## சாகுபடி செலவை குறைக்க புதிய யுக்திஊடுபயிரில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்

தர்மபுரி: சாகுபடி செலவை குறைக்க, விவசாயிகள் ஊடுபயிர் சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.தர்மபுரி மாவட்டம் விவசாய தொழிலை பிரதானமாக கொண்ட மாவட்டம் ஆகும். மாவட்டத்தில் மா, தென்னை, கரும்பு, மஞ்சள், பருத்தி, மரவள்ளி கிழங்கு, கேழ்வரகு, மற்றும் தோட்டக்கலைத்துறை பயிர்களாகன வெங்காயம், வெண்டைக்காய், அவைரக்காய் உள்ளிட்ட காய்கறிகளும், மலர் வகைகளும் சாகுபடி செய்யப்படுகிறது.மாவட்டத்தில் போதிய பருவ மழையில்லாததாலும், விளை பொருள்களுக்கு போதிய விலையில்லாதது மற்றும் ஆட்கள் பற்றாக்குறையால் சாகுபடி செலவு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.கடந்த, இரு ஆண்டுகளாக மஞ்சளுக்கு போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். ஆனாலும் மாவட்டத்தில் தர்மபுரி, நல்லம்பள்ளி, பென்னாகரம், பாலக்கோடு, அரூர், பாப்பிரெட்டிப்பட்டி என மாவட்டம் முழுவதும் விவசாயிகள் , 8 ஆயிரம் ஹெக்டேரில் மஞ்சள் சாகுபடி செய்துள்ளனர்.மஞ்சள் சாகுபடி செலவை ஈடுகட்டும் வகையிலும், விவசாயிகள் வெங்காயத்தை ஊடுபயிராக சாகுபடி செய்துள்ளனர்.இது குறித்து நல்லம்பள்ளியை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியது:

மஞ்சள் சாகுபடி செலவு ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவதுடன், போதிய விலை கிடைக்காத நிலை உள்ளது. ஆனாலும் இந்தாண்டு மஞ்சளுக்கு நல்ல விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.இதனால் மாவட்டம் முழுவதும் பரவலாக விவசாயிகள் மஞ்சள் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். மஞ்சள் சாகுபடி செலவை குறைக்க வேளாண்மைத்துறை அலுவலர்களின் ஆலோசனையின் படி ஊடுபயிராக வெங்காயம் மற்றும் நிலக்கடலை உள்ளிட்ட

குறுகிய காலபயிர்களை சாகுபடி செய்துள்ளோம்.இதனால் உழவு செலவு மற்றும் களை எடுத்தல் உள்ளிட்ட செலவுகள் குறைகிறது. மேலும் மஞ்சளுக்கு பாய்ச்சும் தண்ணீர் மற்றும் உரங்கள் மூலம் ஊடுபயிர்களுக்கு தேவையான தண்ணீர் மற்றும் சத்துக்கள் கிடைக்கிறது. ஊடுபயிர்கள் மூலம் கிடைக்கும் வருமானம் முக்கிய பயிரான மஞ்சள் சாகுபடிக்கான மொத்த செலவை குறைக்கிறது.இவ்வாறு அவர் கூறினார்.

## பூஞ்சை நோய் தாக்குதலால்ஏலக்காய் உற்பத்தி பாதிப்பு

கொச்சி:கேரளாவில் பெய்து வரும் அதிக மழையால், ஏலக்கா# உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, பூஞ்சை தாக்குதலால், இதன் உற்பத்தி, மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக, ஏலக்காய் உற்பத்தி சங்கத்தைச் சேர்ந்த தெவாசியா தெரிவித்தார்.உலகளவில், ஏலக்காய் உற்பத்தியில், இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. நாட்டின் ஏலக்காய் உற்பத்தி, ஆண்டுக்கு, 10-12 ஆயிரம் டன் என்ற அளவில் உள்ளது.

நடப்பாண்டு, ஜூன் 1ம் தேதி முதல் ஜூலை 24ம் @ததி வரையிலுமாக, @கராளாவில், குறிப்பாக, ஏலக்காய் அதிகளவில் உற்பத்தியாகும், இடுக்கி மாவட்டத்தில், கூடுதலாக, 59 சதவீதம் அளவிற்கு மழை பொழிவு காணப்பட்டது.இதனால், பூஞ்சை தாக்குதலால் ஏலக்காய் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. குறைந்தபட்சம், இரண்டு நாட்கள் வெயில் அடித்தால் தான், பூச்சி மருந்து அடிக்கமுடியும். தட்பவெப்ப நிலை மிகவும் மோசமாக இருப்பதால், விவசாயிகளால், பூச்சிமருந்து அடிக்கமுடியாத நிலை உள்ளது. நாட்டின் மொத்த ஏலக்காய் உற்பத்தியில், கேரளாவின் பங்களிப்பு, 70 சதவீதமாகும். இதில், இடுக்கி மாவட்டத்தின் பங்களிப்பு அதிகமாக உள்ளது. கடந்த நிதியாண்டில், நாட்டின் ஏலக்காய் உற்பத்தி, 12,420 டன்னாக இருந்தது என, இந்திய நறுமணப் பொருட்கள் வாரியம் தெரிவித்துள்ளது. இதற்கு முன்பாக,

அதாவது, 2011-12ம் நிதியாண்டில், இதன் உற்பத்தி, மிகவும் அதிகபட்சமாக, 15 ஆயிரம் டன் என்ற அளவில் இருந்தது.சென்ற 2012-13ம் நிதியாண்டில், நாட்டின் ஏலக்காய்ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 52 சதவீதமும், மதிப்பின் அடிப்படையில், 49 சதவீதமும் குறைந்திருந்தது. அவ்வாண்டில், ஏலக்காய் ஏற்றுமதி, 2,250 டன்னாக இருந்தது.

அதேசமயம், 2011-12ம் நிதியாண்டில், 4,650 டன் ஏலக்காய் ஏற்றுமதி மேற்கொள்ளப்பட்டது. இதன் மதிப்பு, 363 கோடி ரூபாயாகும். @நற்று முன்தினம், இடுக்கி ஏலச் சந்தையில், ஒரு கிலோ ஏலக்காய் விலை, 578 ரூபாய் என்ற அளவில் விலை போனது.உற்பத்தி குறைந்ததால், கடந்த 2010ம் ஆண்டு ஜூன் மாதத்தில், ஒரு கிலோ ஏலக்காய் விலை, வரலாறு காணாத அளவிற்கு, 1,950-2,000 ரூபாயாக மிகவும் அதிகரித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.நடப்பாண்டில், ஏலக்காய் உற்பத்தி அதிகரிக்கும் என்ற மதிப்பீட்டால், முன்பேர சந்தைகளில் இதன் விலை குறைவாகவே உள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**29.07.2013**

## காவிரியில் நீர்வரத்து தொடர்ந்து அதிகரிப்பு மேட்டூர் அணை 100 அடியை தொட்டது



மேட்டூர் : மேட்டூர் அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 84,324 கனஅடியாக அதிகரித்துள்ளது. இதனால், அணையின் நீர்மட்டம் இந்த ஆண்டில் முதன் முறையாக 100 அடியை தொட்டுள்ளது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக கபினி அணையில் இருந்து விநாடிக்கு 35 ஆயிரம் கன அடி நீரும், கிருஷ்ணராஜ சாகர் அணையில் இருந்து விநாடிக்கு 65 ஆயிரம் கன அடி நீரும் திறக்கப்பட்டுள்ளது. இதனால், காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

8 ஆண்டுகளுக்கு பின்னர் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் சுமார் ஒரு லட்சம் கனஅடி நீர் கரைபுரண்டு வருகிறது. இந்த நீரால் மேட்டூர் அணையின் நீர்மட்டம்

மளமளவென உயர்ந்து வருகிறது. மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் வினாடிக்கு 52,700 கனஅடி நீர் வந்த நிலையில், நேற்று காலை 8 மணி நிலவரப்படி நீர்வரத்து வினாடிக்கு 84,324 கனஅடியாக அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் காலை நீர்மட்டம் 89.59 அடியாக இருந்த நிலையில் 24 மணி நேரத் தில் நீர்மட்டம் 5.67 அடி உயர்ந்து 95.26 அடியானது.

நீர்வரத்து விநாடிக்கு 85 ஆயிரம் கனஅடி அளவிற்கு உள்ளதால் இந்த ஆண்டில் முதன்முறையாக அணை யின் நீர் மட்டம் 100 அடியை நேற்றிரவு தொட்டுள்ளது. இதே அளவிற்கு நீர் வரத்து இருந்தால் அடுத்த ஒரு வாரத்திற்குள் அணை முழு கொள்ளளவை (120 அடி) எட்டி விடும். எனவே, பாசனத்திற்கு ஆகஸ்ட் 12ம் தேதி நீர் திறக்கப்படுவதற்கு முன்பு அணை நிரம்பி உபரி நீர் திறக்கப்படுவதற்கு வாய்ப்பு உள்ளது.

தற்போது அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 6800 கனஅடி நீர் திறக்கப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 58.87 டிஎம்சி. சுரங்க மின்நிலையத்தின் வழியாக நீர் திறக்கப்படுவதால் 30 மெகாவாட்டாக இருந்த மின் உற்பத்தி 60 மெகாவாட்டாக அதிகரித்துள்ளது. மேலும், கதவணைகளிலும் மின் உற்பத்தி தொடங்கி உள்ளது. நீர் வரத்து அதிகரிப்பால் மேட்டூர் அணை யின் நீர்மட்டம் 95 அடியை தாண்டி உள்ளதால், உபரி நீர் திறக்கப்படும் 16 கண் மதகு பகுதியை நீர் நெருங்கி உள்ளது.

மாநில எல்லையில் உள்ள பிலிகுண்டுலுவில் நேற்று காலை 9 மணி நிலவரப்படி காவிரியில் நீர்வரத்து வினாடிக்கு 80 ஆயிரம் கனஅடியாக இருந்தது. ஒகேனக்கல் காவிரியில் தொடர்ந்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் ஆறு மற்றும் அருவிகளில் குளிக்க தடை நீடித்து வருகிறது.

**பருப்பு வகைகள் கிலோவுக்கு ரூ.10 வரை குறைந்தது**



சென்னை : விளைச்சல் அதிகரிப்பால் அரிசி, பருப்பு, புளி உள்ளிட்ட மளிகை பொருட்களின் விலை குறைய தொடங்கியுள்ளது. தென்மேற்கு பருவமழை சரியாக நேரத்தில் பெய்ததாலும், மோட்டார் பம்புகள் மூலம் விவசாயம் நடைபெற்றதாலும் தமிழகத்தில் திருச்சி, தஞ்சாவூர், திண்டுக்கல், கரூர், நாகப்பட்டினம், ஆரணி, திண்டுக்கல், காஞ்சிபுரம், பொன்னேரி உள்ளிட்ட பகுதியில் இந்த ஆண்டு நெல் விளைச்சல் அதிகமாக உள்ளது. ஆந்திரா, கர்நாடகாவில் இருந்து தமிழகத்துக்கு அரிசி வரத்து அதிகமாக உள்ளதாலும் அரிசி விலை குறைய தொடங்கியுள்ளது. கடந்த மாதம் 1 கிலோ ரூபாலி அரிசி ரூ.28க்கு விற்றது ரூ.26 ஆக குறைந்துள்ளது.

இதேபோல் இட்லி அரிசி ரூ.38லிருந்து ரூ.28க்கும், டீலக்ஸ் ரூ.32லிருந்து ரூ.30க்கும், அதிசய பொன்னி ரூ.34லிருந்து ரூ.32க்கும், பாபட்லா (புதுசு) ரூ.40லிருந்து ரூ.38க்கும், பாபட்லா (பழையது) ரூ.44லிருந்து ரூ.42க்கும், வெள்ளை பொன்னி (புதுசு) ரூ.50லிருந்து ரூ.48க்கும், வெள்ளை பொன்னி (பழையது) ரூ.54லிருந்து ரூ.52க்கும், பொன்னி பச்சரிசி (புதுசு) ரூ.30லிருந்து ரூ.28க்கும், பொன்னி பச்சரிசி (பழையது) ரூ.50லிருந்து ரூ.48 ஆகவும் விலை குறைந்துள்ளது.

குஜராத், மத்திய பிரதேசம், உத்திரபிரதேசம், மகராஷ்டிரா, அரியானா, டெல்லி, சட்டீஸ்கர் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து தமிழகத்திற்கு பருப்பு வகைகள்

வருகிறது. அந்த மாநிலங்களில் அதிக விளைச்சலால் பருப்பு விளையும் குறைந்துள்ளது. துவரம் பருப்பு ரூ.80லிருந்து ரூ.75க்கும், தான்சானியா பருப்பு ரூ.65லிருந்து ரூ.55க்கும், உளுந்தம்பருப்பு ரூ.68லிருந்து ரூ.62க்கும், பர்மா உளுந்தம்பருப்பு ரூ.60லிருந்து ரூ.55க்கும், பாசிப்பருப்பு ரூ.85லிருந்து ரூ.75க்கும், உளுந்தம்பருப்பு ரூ.75லிருந்து ரூ.70க்கும், கடலைப்பருப்பு (முதல் ரகம்) ரூ.60லிருந்து ரூ.50க்கும், கடலைப்பருப்பு (2ம்ரகம்) ரூ.55லிருந்து ரூ.45 ஆகவும் விலை குறைந்துள்ளது.

பாக்கெட்டில் விற்கப்படும் துவரம் பருப்பு ரூ.5 முதல் ரூ.10 வரை அதிகமாக விற்கப்படுகிறது. இதே போல, புளி(முதல் ரகம்) ரூ.120லிருந்து ணீ100க்கும், புளி (2ம்ரகம்) ரூ.100லிருந்து ரூ.70க்கும், குண்டு வத்தல் ரூ.130லிருந்து ணீ110க்கும், குண்டு வத்தல் (2ம்ரகம்) ரூ.100லிருந்து ரூ.80க்கும், நீட்டு வத்தல் ணீ90லிருந்து 85க்கும் விற்கப்படுகிறது.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து எண்ணெய் விலையும் குறைய தொடங்கியுள்ளது. நல்லெண்ணெய் (1 லிட்டர்) ரூ.260லிருந்து ரூ.225க்கும், காங்கேயம், பொள்ளாச்சியில் இருந்து வரும் நல்லெண்ணெய் ரூ.220லிருந்து ரூ.195க்கும், கடலை எண்ணெய் ரூ.110லிருந்து ரூ.100க்கும், தேங்காய் எண்ணெய் ரூ.110லிருந்து ரூ.95க்கும் (கிலோ), தேங்காய் எண்ணெய் (2ம் ரகம்) ரூ.95லிருந்து ரூ.80க்கும், விளக்கு ஏற்றும் நல்லெண்ணெய் ரூ.90லிருந்து ரூ.75க்கும், வனஸ்பதி ரூ.90லிருந்து ரூ.75 ஆகவும் விலை குறைந்துள்ளது என்று தமிழ்நாடு அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் தெரிவித்துள்ளார்.

சூரியகாந்தி எண்ணெய் விலை அதிகரிப்பு

இந்தியாவிற்கு 75 சதவீதம் பாமாயில் இந்தோனேசியா, மலேசியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. அதேபோல், தென் அமெரிக்கா, உக்ரைன், ரஷ்யாவில் இருந்து சூரியகாந்தி எண்ணெய் இறக்குமதியாகிறது. இந்திய ரூபாய் மதிப்பு சரிய தொடங்கியதால் அங்கிருந்து இறக்குமதி செய்யப்படும் பாமாயில், சூரியகாந்தி எண்ணெய் விலை அதிகரிக்க தொடங்கியுள்ளது. கடந்த வாரம் பாமாயில் ரூ.55க்கு விற்பனையானது இது தற்போது ரூ.57க்கு விற்கப்படுகிறது.

சூரியகாந்தி எண்ணெய் ரூ.88லிருந்து ரூ.90 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. ரூபாய் மதிப்பு வீழ்ச்சி சரியாகும் வரை பாமாயில், சூரியகாந்தி எண்ணெய் விலை குறையவாய்ப்பில்லை என்று வியாபாரிகள் கருத்து தெரிவித்துள்ளளர்.

மளிகை பொருட்கள் விலை மேலும் குறைய வாய்ப்பு

விளைச்சல் அதிகரிப்பால் அரிசி விலை குறைந்து வருகிறது. வரும் நாட்களில் அரிசி விலை கிலோவுக்கு ரூ.2 முதல் ரூ.4 வரை குறைய வாய்ப்புள்ளது. இதே போல அனைத்து மளிகை பொருட்களின் விலையும் குறைய வாய்ப்புள்ளதே தவிர விலை அதிகரிக்க வாய்ப்பில்லை. இந்த விலை உயர்வு நடுத்தர மக்களுக்கு சற்று ஆறுதலாக உள்ளது. இருந்த போதிலும் ஆடி மாதம் என்பதால் மளிகை கடைகளில் விற்பனை குறைவாக உள்ளது. மக்கள் அனைவரும் ஆடி மாதத்தில் ஜவுளி வாங்குவதிலே அதிக பணத்தை செலவிட்டு வருகிறார்கள் என்று தமிழ்நாடு அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் கூறினார்.

**துவரம் பருப்பு விலை ரூ.300 சரிந்தது**

விருதுநகர்: கடலை எண்ணெய் விற்பனை மந்தம் காரணமாக டின்னுக்கு மேலும் ரூ.50 குறைந்துள்ளது. கர்நாடகா வின் குல்பர்க்காவிலுருந்து இருப்பு துவரை விற்பனை க்கு வரத் துவங்கியதால் துவரம்பருப்பு மூட்டைக்கு ரூ.300 வரை குறைந்துள்ளது.கடலைப்பருப்பு (80 கிலோ) மூட்டை ரூ.4,400ல் இருந்து ரூ.4,500 ஆக உயர்ந்துள்ள நிலைரூ.லும், விற்பனை மந்தமாக உள்ளதால், கடலை எண்ணெய் (15 கிலோ) டின் ரூ.1,600ல் இருந்து ரூ.1,550 என குறைந்துள்ளது. கர்நாடகாவில் பெய்துள்ள கனமழையால், அடுத்த சாகுபடி துவங்குகிறது. இதனால், இருப்பில் இருந்த துவரை விற்பனைக்கு வரத்துவங்கி உள்ளது. குல்பர்க்கா துவரை ரூ.3,600ல் இருந்து ரூ.3,200, பர்மா துவரை ரூ.3,300ல் இருந்து ரூ.3,100, துவரம் பருப்பு லயன் ரூ.6,500ல் இருந்து ரூ.6,200, துவரம்பருப்பு உடைசல் ரூ.5,700ல் இருந்து ரூ.5,400 என விலை சரிந்துள்ளது.

**மேட்டூர் அணை ஆக.12ல் திறப்பு சம்பாவுக்கு தான்; குறுவை 'அம்போ'**

சென்னை : மேட்டூர் அணை ஆகஸ்ட் 12ம் தேதி திறக்கப்படும் என்று முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்துள்ளதை அடுத்து இந்த ஆண்டு குறுவைச்சாகுபடி 'அம்போ' என்பது உறுதியாகிவிட்டது என்று திமுக தலைவர் கருணாநிதி குறிப்பிட்டுள்ளார். திமுக தலைவர் கருணாநிதி நேற்று வெளியிட்ட அறிக்கை: "சம்பா சாகுபடிக்காக மேட்டூர் அணை ஆகஸ்ட் 12ம் தேதி திறக்கப்படும்'' என்று முதலமைச் சர் அறிவித்திருக்கிறார். இதிலிருந்து இந்த ஆண்டு குறுவை சாகுபடி "அம்போ" ஆகி விட்டது என்பது உறுதியாகிவிட்டது.

இதைத்தான் நான் கடந்த மாதம் விடுத்த அறிக்கையில், ''குறுவைச் சாகுபடி உண்டா? இல்லையா? என்று கேட்ட கேள்விக்குத்தான், முதலமைச்சர் நேற்றைய தினம் இந்த ஆண்டு குறுவைச் சாகுபடி கிடையாது; சம்பா சாகுபடி மட்டும்தான்;

என்று பதில் கொடுத்திருக்கிறார்.

கடந்த ஆண்டு ஜூன் 12ம் தேதி திறக்க வேண்டிய மேட்டூர் தண்ணீரை கடந்த ஆண்டு எப்போது திறந்தார்கள் தெரியுமா? செப்டம்பர் 17ம் தேதிதான் திறந்தார்கள். கடந்த ஆண்டு இவ்வாறு தாமதமாக அணை திறக்கப்பட்டதால், பிப்ரவரி இறுதிவரை நீர் தேவைப் படும் என்று டெல்டா விவசாயிகள் கோரியிருந்தனர். பொதுவாக டெல்டா பாசனத்திற்கு வழக்கமாக ஜனவரி 28ம் தேதி வரை மேட்டூர் அணை திறந்து வைக்கப்பட்டிருக்கும். கடந்த டிசம்பர் 21ம் தேதி இரவு 8 மணியோடு பாசனத்திற்கு அணை திறப்பு நிறுத்தப்பட்டு கதவுகள் மூடப்பட்டுவிட்டன.

மேலும் முதலமைச்சரின் அறிக்கையில் 2011ம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ஜூன் 12ம் தேதி மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காக நீரைத் திறந்து விடுவதற்குப் பதிலாக, முதன் முறையாக முன்கூட்டியே 2011ம் ஆண்டு ஜூன் 6ம் தேதியே அதாவது 6 நாட்களுக்கு முன்பே நீரைத் திறந்து விடுமாறு ஆணையிட்டேன் என்றும் கூறியிருக்கிறார். 2011ம் ஆண்டு மே 13ம் தேதி வரை தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பிலே இருந்தது திமுக. ஜூன் வரை அந்த ஆட்சியின் காலம் நீடித்திருந்தால் அப்போதும் தண்ணீர் திறந்துதான் விடப்பட் டிருக்கும். அதிமுக ஆட்சி க்கு வந்தது மே மாதத்தில்; ஜூன் 6ம் தேதிக்குள் அதா வது ஆட்சிக்கு வந்த 23 நாட்களுக்குள் இவர்கள் என்ன அற்புதம் செய்து, மேட்டூர் அணையை திறக்க செய்துவிட்டார்கள்? மேட்டூர் அணை நிரம்பிவிட்டது என்றால் திறந்துதானே ஆக வேண்டும்.

“காவிரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடச் செய்ததுடன், காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும்

குழு ஆகியவற்றை அமைத்திடவும் எனது அரசு போராடி வருகிறது“ என்று முதலமைச்சர் ஜெயலலிதா தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். இவரது ஆட்சிக் காலத்திலே நடுவர் மன்ற இறுதி ஆணை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டது என்பது வேண்டுமானால் உண்மையாக இருக்கலாம். நீதிபதி தன்னிச்சையாகத்தான்,

நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடும்படி உத்தரவிட்டார் என்பதே அசைக்க முடியாத உண்மை. இந்த உண்மையை ஜெயலலிதாவே 20.2.13ல் அளித்த பேட்டியின்போது உச்சநீதி மன்ற உத்தரவால்தான் அரசிதழில் வெளியிட வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டது என்று ஆங்கிலத்தில் பதிலளித்து, அது அவர்களுடைய கட்சி ஏட்டிலேயே வெளிவந்துள்ளது.

5.2.2007ல் நடுவர் மன்றம் இறுதித் தீர்ப்பு வெளியானபோது, அந்தத் தீர்ப்பை அ.தி.மு.க.வினரோ, ஜெயலலிதாவோ நல்ல தீர்ப்பு என்று ஏற்றுக் கொண்டார்களா? “கருணாநிதியின் தொடர் துரோகச் செயலால்தான் நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு தமிழகத்திற்குப் பாதகமாக வந்துள்ளது, இதற்குத் தார்மீகப் பொறுப்பேற்று மைனா ரிட்டி திமுக அரசு ராஜினாமா செய்ய வேண்டும்“ என்று ஜெயலலிதா அறிக்கை விட்டது உண்டா இல்லையா?

அப்படியானால், தமிழகத்திற்குப் பாதகமான அந்தத் தீர்ப்பைத்தான் மத்திய அரசின் அரசிதழிலே வெளியிட ஜெயலலிதா காரணமாக இருந்திருக்கிறார் என்பதையாவது ஒப்புக்கொள் கிறாரா? “நடுவர் மன்றத் தீர்ப்பு வந்தால்கூட கர்நாடகாவில் அவர்களாகவே அணையைத் திறந்தால் தான் காவிரி நீர் தமிழ்நாட்டிற்கு வரும்; கர்நாடகம் சம்மதித்து ஒரு நியாயமான அனுகூலமான

முடிவை மேற்கொண்டால்தான், நடுவர் மன்றத் தீர்ப்பு பயனுள்ளதாக அமைய முடியும்'' என்று 21.3.1991ல், நடுவர் மன்றத்தை மிகவும் குறைத்து மதிப்பிட்டு, ஜெயலலிதா கூறியது உண்டா இல்லையா?

"நடுவர் மன்றம் தீர்ப்பு வழங்கினால் கூட அதை நிறைவேற்ற வேண்டுமென்ற கட்டாயம், கர்நாடக முதல்வருக்குக் கிடையாது" என்று ஜெயலலிதா எள்ளி நகையாடவில்லையா? ஏன், 2.4.2002ல் தமிழகச் சட்டப் பேரவையிலேயே, அ.தி.மு.க. ஆட்சியில் காவிரி நதிநீர் ஆணையத்தை, செயல்படாத ஆணையம் என்றும், பல் இல்லாத ஆணையம் என்றும், அந்த ஆணையத்தை ஏற்காமல் பா.ஜ.க. கூட்டணியிலிருந்து அ.தி.மு.க. வெளியேறியது என்றும் பிரதமர் தலைமையிலான ஆணையத்தின் தரத்தைத் தாழ்த்தி ஜெயலலிதா பேசவில்லையா?

அதன் பிறகு, அதே அ.தி.மு.க. ஆட்சியில் 21.6.2002ல் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், "காவிரி நதிநீர் ஆணையத்தின் கூட்டங்களில் கலந்து கொள்வதில்லை"" என்று ஆணையத்தையே அவமதித்திடும் வகையில் முடிவெடுத்து அறிவிக்கவில்லையா? பின்னர் அந்த முடிவினைத் தலைகீழாக மாற்றிக் கொண்டு, அவரே அந்த ஆணையக் கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லையா?

மேலும், மேலும் இன்னமும் எவ்வளவோ எழுதிக் கொண்டே போகலாம்! ``இந்தியாவிற்கே முன்னோடியாக தனது தலைமையிலான தமிழக அரசு விளங்கி வருகிறது"" என்று மேட்டூர் அணை திறப்பு பற்றிய அறிவிப்பில் குறிப்பிட்டுக் கொண்டதாலும், காவிரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட தானும், தனது அரசும்தான் காரணம் என்று அறிக்கையிலே

கூறியதாலும், உண்மையில் என்ன நிலை என்பதை மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காகத்தான்; கடந்த கால நிகழ்வுகளை நினைவுகூர்ந்திடும் கட்டாயத்திற்கு நான் ஆளாகி இந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறேனே தவிர, யாரையும் குறை கூற வேண்டும் என்பது என் நோக்கமல்ல! இவ்வாறு கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

நடுவர் மன்றம் தீர்ப்பு வழங்கினால் கூட அதை நிறைவேற்ற வேண்டுமென்ற கட்டாயம், கர்நாடக முதல்வருக்கு கிடையாது" என்று ஜெயலலிதா எள்ளி நகையாடவில்லையா? ஏன், 2.4.2002ல் தமிழக சட்டப் பேரவையிலேயே, அ.தி.மு.க. ஆட்சியில் காவிரி நதிநீர் ஆணையத்தை, செயல்படாத ஆணையம் என்றும், பல் இல்லாத ஆணையம் என்றும், அந்த ஆணையத்தை ஏற்காமல் பா.ஜ.க. கூட்டணியிலிருந்து அ.தி.மு.க. வெளியேறியது என்றும் பிரதமர் தலைமையிலான ஆணையத்தின் தரத்தைத் தாழ்த்தி ஜெயலலிதா பேசவில்லையா?

**இன்றைய வேளாண் செய்திகள்**

**29.07.2013**

**நீர்மட்டம் உயர்வு எதிரொலி: முல்லைப்பெரியாறு அணையில் கூடுதல் தண்ணீர் திறப்பு**

கூடலூர்,

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் அணையில் இருந்து இரைச்சல் பாலம் வழியாக கூடுதல் தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது.

நீர்மட்டம் உயர்வு

தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களின் நீர் ஆதாரமாக முல்லைப் பெரியாறு விளங்கி வருகிறது. அணையில் இருந்து கடந்த மாதம் முதல்போக பாசனம், குடிநீர் மற்றும் மின் உற்பத்திக்காக தண்ணீர் திறக்கப்பட்டது.

முல்லைப் பெரியாறு அணை யில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டதால், வைகை அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் போதிய மழை இல்லாத நிலையிலும் வைகை அணைக்கு தொடர்ந்து நீர்வரத்து ஏற்பட்டு உள்ளது. இதனால் வைகை அணையின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது. வைகை அணையில் இருந்தும் திண்டுக்கல், மதுரை மாவட்டத்தின் முதல்போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது.

கூடுதல் தண்ணீர் திறப்பு

முல்லைப் பெரியாறு அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. இதன் எதிரொலியாக வினாடிக்கு 345 கனஅடி தண்ணீர் வீதம் இரைச்சல் பாலம் வழியாக திறந்து விடப்பட்டு உள்ளது. ஏற்கனவே மின் உற்பத்தி மூலம் வினாடிக்கு 1,372 கன அடி தண்ணீர் வரும் நிலையில், தற்போது இரைச்சல் பாலம் வழியாக வரும் தண்ணீரும் சேர்த்து மொத்தம் வினாடிக்கு 1,717 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது.

<u>நீர்மட்டம்</u>

152 அடி உயரம் கொண்ட முல்லைப்பெரியாறு அணை யின் நேற்றைய நீர்மட்டம் 131.60 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 2,515 கன அடி தண்ணீர் வரத்து உள்ளது. அணையில் மொத்தம் 5,071 மில்லியன் கன அடி தண்ணீர்இருப்பு உள்ளது. அதுபோல் 71 அடி உயர வைகை அணையின் நீர் மட்டம் நேற்று 49.97 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,378 கன அடி தண்ணீர் வரத்து உள்ளது. மொத்தம் 1,988 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு 960 கன அடி தண்ணீர் திறந்து விடப்படு கிறது.

**ஊட்டியில் 25 கிலோ பொன்னி அரிசி ரூ.1,450–க்கு விற்பனை ஏலக்காய் கிலோ ரூ.900; குறுமிளகு கிலோ ரூ.480**

<u>ஊட்டி</u>,

ஊட்டியில் 25 கிலோ பொன்னி அரிசி ரூ.1,450–க்கு விற்பனையா கிறது. பலசரக்கு பொருட் களில் ஏலக்காய் கிலோ ரூ.900–க்கும், குறு மிளகு ரூ.480–க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

<u>அரிசி ரகங்கள்</u>

நீலகிரி மாவட்டத்தில் கூட லூர், பந்தலூர் தலுகாவில் மட்டும் நெற்பயிர்கள் விளை கிறது. மற்ற இடங்களில் விளை வது கிடையாது. இதனால் மாவட்டத்தில்

வசிக்கும் மக்க ளின் அரிசி தேவையைகோவை, மேட்டுப்பாளையம், மைசூர் மற்றும் வெளி மாவட் டங்கள், வெளி மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படும் அரிசி ரகங்கள் நீலகிரி மாவட்டத்திற்கு  கொண்டு வந்து விற்பனை செய்யப்படுகின்றன.

அரிசி மண்டிகள், மளிகை கடைகள் மூலமாக பொது மக்களுக்கு அரிசி விற்பனை செய்யப்பட்டு வருகிறது.தற் போது ஊட்டியில் விற்பனை செய்யப்பட்டு வரும் அரிசி ரகங்களின் விலை விவரம் வருமாறு:–

முதல் தர பொன்னி அரிசி 25 கிலோ மூடை ரூ.1,450–க்கும், 2–ம் தர அரிசி மூடை ரூ.1,300, அதிசய பொன்னி மூடை ரூ.800–க்கும், முதல் தர பி.டி. பச்சரிசி மூடை ரூ.1,400–க்கும், 2–ம் தர பச்சரிசி மூடை 1,350–க்கும், பச்சரிசி மூடை ரூ.800–க்கும், இட்லி அரிசி மூடை ரூ.800–க்கும் விற் பனையாகிறது.

பல சரக்கு பொருட்கள்

பருப்பு வகைகளை பொறுத்த வரை உளுந்து முதல் தரம் கிலோ ரூ.70–க்கும், 2–ம் தரம் ரூ.66–க்கும், துவரம் பருப்பு முதல் தரம் கிலோ ரூ.80–க்கும், 2–ம் தரம் ரூ.70–க்கும், கடலை பருப்பு கிலோ ரூ.60–க்கும், தட்டைப்பயறு கிலோ ரூ.65 முதல் 70–க்கும், பாசிப்பயறு கிலோ ரூ.70 முதல் 80–க்கும், கொண்டை கடலை ரூ. 55 முதல் 65–க்கும் விற்பனை செய்யப் பட்டு வருகிறது.

பலசரக்கு பொருட் களில் சீரகம் கிலோ ரூ.190–க்கும், சோம்பு கிலோ ரூ.160–க்கும், ஏலக்காய் முதல் தரம் கிலோ ரூ.900–க்கும், 2–ம் தரம் கிலோ ரூ.750–க்கும், புளி கிலோ ரூ.75 முதல் 80–க்கும், பூண்டு கிலோ ரூ.80 முதல் 120–க்கும், குறு மிளகு கிலோ ரூ.480–க்கும் விற்பனையாகிறது.

சர்க்கரை– வெல்லம்

மல்லி கிலோ ரூ.110–க்கும், கடுகு கிலோ ரூ.75–க்கும், வர மிளகாய் கிலோ ரூ.110–க்கும், வெந்தயம் கிலோ ரூ.50–க்கும், வெல்லம் கிலோ ரூ.55–க்கும், சர்க்கரை

கிலோ ரூ.35–க்கும், பொட்டுக்கடலை கிலோ ரூ.65–க்கும் விற்பனை செய்யப் பட்டு வருகிறது.

**ஓமன் நாட்டில் தடைநீக்கம்: நாமக்கல் மண்டலத்தில் இருந்து 1 கோடி முட்டைகள் ஏற்றுமதி**

நாமக்கல்,

இந்திய முட்டைக்கான தடையை ஓமன்நாடு நீக்கியதை தொடர்ந்து, நாமக்கல்லில் இருந்து கடந்த 25 நாட்களில் 1 கோடி முட்டைகள் அந்நாட்டுக்கு ஏற்றுமதி ஆகி உள்ளன.

பறவை காய்ச்சலால் பாதிப்பு

நாமக்கல் மண்டலத்தில் 1100–க்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் உள்ளன. இவற்றில் நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ 3½ கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இந்த முட்டைகள் கேரளாவுக்கு 90 லட்சம், தமிழக அரசின் சத்துணவு திட்டத்திற்கு 50 லட்சம், வெளிநாடுகளுக்கு 40 லட்சம் என அனுப்பப்பட்டு வந்தன. மற்ற முட்டைகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

தற்போதும் இதே நடைமுறை நீடித்தாலும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் தினசரி முட்டையின் அளவு வெகுவாக குறைந்து உள்ளது பண்ணையாளர்களை கவலையில் ஆழ்த்தி உள்ளது. இதற்கு இந்தியாவின் ஏதாவது ஒரு பகுதியில் குறிப்பிட்ட இடைவெளியில் தாக்கும் பறவை காய்ச்சல் நோயே முக்கிய காரணம் என பண்ணையாளர்கள் தெரிவித்து வருகின்றனர்.

தடை நீக்கம்

கடந்த அக்டோபர் மாதம் இறுதியில் கர்நாடக மாநிலம் ஹெசர்கட்டா பகுதியில் மத்திய அரசுக்கு சொந்தமான கோழிப்பண்ணை ஒன்றில் பறவை காய்ச்சல் நோய்

தாக்கி 3,400 வான்கோழிகள் இறந்தன. இதையடுத்து இந்திய முட்டைக்கு ஓமன்நாடு தடை விதித்தது. இதன் தொடர்ச்சியாக சில ஏற்றுமதி நிறுவனங்கள் தடையை நீக்குமாறு கோரிக்கை விடுத்தன. இதையடுத்து அங்கிருந்து வந்த கால்நடை மருத்துவர்கள் அடங்கிய குழுவினர் தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

இதையடுத்து கடந்த மாதம் 15–ந் தேதி ஒரு குறிப்பிட்ட நிறுவனத்துக்கு ஓமன்நாடு தடையை நீக்கியது. இதையடுத்து அந்த நிறுவனம் கடந்த 1–ந் தேதி முதல் ஓமன்நாட்டுக்கு முட்டை ஏற்றுமதியை தொடங்கி உள்ளது. கடந்த 25 நாட்களில் 1 கோடிக்கும் அதிகமான முட்டைகளை ஏற்றுமதி செய்து உள்ளோம் என அந்த நிறுவனத்தினர் தெரிவித்தனர். படிப்படியாக அனைத்து நிறுவனங்களுக்கும் ஓமன்நாடு அனுமதி வழங்கும் எனவும் அவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர். இதனால் முடங்கி கிடந்த ஏற்றுமதி நிறுவனங்கள் சுறுசுறுப்பு அடைந்து உள்ளன.